| | | |
|---|---|---|
| தரம் 11 | பாடசாலை மட்ட மூன்றாம் தவணை மதிப்பீடு<br>2023(2024)<br>**தமிழ் மொழியும் இலக்கியமும் - I** | புள்ளி |

சுட்டெண் | | | | | |  நேரம்: 1 மணித்தியாலம்

கவனிக்க:

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாள் *I* இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் 1, 2, 3, 4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) "கஞ்சமுகம் நோக்காது மண்ணிலத்து வாழேன்" இங்கு **கஞ்சம்** என்பது
   1. நிலா  2. ஒளி  3. தாமரை  4. அழகு

2) "தாது ஊதி அளி முரலும்" என்பதில் **'அளி'** என்பது
   1. தும்பி  2. வண்டு  3. பூச்சி  4. தேனி

3) 'இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்' **ஞானி** என்பதன் எதிர்க்கருத்து
   1. அஞ்ஞானி  2. அறிவிலி  3. புல்லர்  4. பேதை

4) "பழியெனின் உலகுடன் பெறினுங் கொள்ளலர்" **'பழி'** என்பதன் எதிர்க்கருத்து
   1. கீர்த்தி  2. புகழ்  3. வைதல்  4. வாழ்த்து

5) சினிமா மொழிக்குள் அடங்காதது எது?
   1. ஒளி  2. படத்தொகுப்பு  3. ஒலி  4. காட்சிப் படிமம்

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) கணிப்பொறி எத்தனை பக்கம், எத்தனை வரிகள், எத்தனை பராக்கள் என்று கச்சிதமாய்ச் சொல்லிவிடும்... **'பராக்கள்'** என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
   1. விடயங்கள்  2. அடிகள்  3. பந்திகள்  4. செய்யுள்

7) பொருத்தமான சொற்களின் இணைப்பு அல்லாதது
   1. சிலப்பதிகாரம் - இளங்கோ  2. மணிமேகலை - சீத்தலைச் சாத்தனார்
   3. சீறாப்புராணம் - வீரமாமுனிவர்  4. நளவெண்பா - புகழேந்தி

8) கொரோணா தொற்றுக் காரணமாக தற்பொழுது *Online* மூலம் வகுப்புகள் நடைபெறுகின்றன. *Online* என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
   1. புலனம்  2. கீச்சகம்  3. நிகழ்நிலை  4. நிகழ்தகவு

9) உரை பதறக் கதுமென உற்று எழுந்து - கதுமென என்னும் சொல் உணர்த்துவது
   1. பயம்  2. ஒலி  3. அச்சம்  4. விரைவு

10) கன்று எனும் இளமைப் பெயர் பின்வருவனவற்றுள் எதனுடன் பொருந்தி வரும்
1. மான் 2. மீன் 3. பணி 4. சிங்கம்

11) 'முகங்கொடுத்தல்' எனும் மரபுத் தொடர் தரும் பொருள்
1. கவலையடைதல் 2. காட்சி கொடுத்தல் 3. வெகட்கமடைதல் 4. சினத்தல்

12) எண்ணித் துணியாது கருமமாற்றும் இயல்பைக் குறிப்பதற்கு பொருத்தமான மரபுத் தொடர்
1. முதலைக்கண்ணீர் 2. கண்மூடித்தனம் 3. ஏட்டிக்குப் போட்டி 4. ஓட்டைவாய்

13) நாம் வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும் என்பதை உணர்த்தும் பழமொழி
1. கந்தையானாலும் கசக்கிக் கட்டு
2. காகம் திட்டி மாடு சாகாது
3. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது
4. கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்

14) **'முக்கியத்துவம்'** எனும் கருத்தமைந்த பழமொழி
1. அச்சாணி இல்லாத் தேர் முச்சாணும் ஓடாது
2. ஆழமறியாது காலை விடாதே
3. தகுதிக்கு மேல் எண்ணக் கூடாது
4. இளமையில் கல்வி சிலையில் எழுத்து

15) **'காகம் உறவு கலந்து உண்பது போல''** எனும் அருஞ்சொற்றொடர் உணர்த்துவது
1. ஒற்றுமை 2. விட்டுக் கொடுத்தல் 3. விருந்தோம்பல் 4. புரிந்துணர்வு

16) **பொலிவின்மை** எனும் கருத்தமைந்த உவமைத்தொடர்
1. திரிசங்கு சுவர்க்கம் போல
2. கொழுகொம்பற்ற கொடி போல
3. சிவபூசையில் கரடி புகுந்தது போல
4. சந்திரனில்லா வானம் போல

17) பொதுக்கூட்டம் ஒன்றில் தவிசாளர் உரை நிகழ்த்தினார் - இங்கு **'தவிசாளர்'** எனக் குறிக்கப்படுபவர்
1. தலைவர் 2. செயலாளர் 3. காப்பாளர் 4. பொருளாளர்

18) வானிலை சீரற்றுக் காணப்படுகிறது
மீனவர்கள் கடலுக்குச் செல்லமாட்டார்கள்
மேற்படி வாக்கியங்களை இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
1. எனினும் 2. ஆகவே 3. ஆனால் 4. அல்லது

19) வயல் எங்கும் பச்சைப்பசேல் எனக் காணப்பட்டது - பச்சைப்பசேல் என்பது
1. அடுக்கிடுக்குத் தொடர்
2. அடுக்குத்தொடர்
3. இணைமொழி
4. இரட்டைக்கிளவி

20) அவன் கைநிறைய துட்டு உள்ளது - துட்டு என்பது
1. அரபு 2. ஆங்கிலம் 3. டச்சு 4. பிரேஞ்சு

- **பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) 'பூனை அழுதான்' என்பது
1. எண்வழு 2. காலவழு 3. திணைவழு 4. இடவழு

22) பின்வருவனவற்றுள் முன்னொட்டு ஏற்காத சொல்
1. விஞ்ஞானம் 2. அநீதி 3. அவமானம் 4. நோயாளி

23) எழில் வந்தாள் - இது
1. உவமைத் தொகை
2. பண்புத்தொகை
3. அன்மொழித்தொகை
4. வினைத்தொகை

24) ஐ, ஔ எனும் எழுத்துக்களின் இன எழுத்துக்களாவன
1. அ, இ 2. எ, இ 3. இ, உ 4. ஆ, ஈ

25) 'தங்கத்தால் செய்த காப்பு' ஆல் உருபு ஏற்ற பொருள்

1. கர்த்தா 2. கருவி 3. மூலம் 4. காரணம்

26) கால் கழுவி வருகிறேன் என்பது

1. இடக்கரடக்கல் 2. மங்கலம் 3. போலி 4. குழுஉக்குறி

27) இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாக வருவது

1. எறிகணை
2. மதிமுகம்
3. பேராசிரியர் நல்ல தம்பி
4. எனவே

28) வன்தொடர் குற்றியலுகரமாக வருவது

1. மார்பு 2. கொக்கு 3. பந்து 4. நாடு

29) பொருத்தமற்ற உதாரணம் அமைந்த சொற்றொகுதியை தெரிவு செய்க.

1. ஏவல் வினை - நட, வா, போ
2. குறிப்பு வினை - நல்லன், கரியன், செய்தான்
3. தெரிநிலை வினை - குடித்தான், சென்றான், எழுதினான்
4. வியங்கோள் வினை - வாழட்டும், ஒழிக, தருக

30) 1. பெயர்ச்சொல் - கதிரை, புத்தகம், அன்பு
2. இடுகுறிப் பெயர் - மண், கடல், மலை
3. காரணப் பெயர் - பறவை, வளையல், காதணி
4. ஆக்கப் பெயர் - முதலாளி, படிப்பு, நீர் வீழ்ச்சி

- **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமா விடையைத் தெரிவு செய்க.**

31) உள்ளுராட்சித் தேர்தலில் சுயேட்சையாக பல .......................... போட்டியிடுகின்றனர்.

1. வாக்காளர்கள்
2. வேட்பாளர்கள்
3. உறுப்பினர்கள்
4. ஆணையாளர்கள்

32) இயற்கை அனர்த்தத்தினால் .......................... மனித உயிர்கள் பலியாகின.

1. குறைநிறையின்றி
2. ஈவிரக்கமின்றி
3. கணக்குவழக்கின்றி
4. கட்டுக்காவலின்றி

33) புகை மண்டலம் .......................... என சூழ்ந்தது.

1. குபு குபு 2. மள மள 3. மட மட 4. கட கட

34) இலஞ்சம் பெறும் ஊழியர்கள் மீது .......................... நடவடிக்கை எடுக்கப்படும்.

1. மாற்று 2. ஒழுக்காற்று 3. பாதுகாப்பு 4. அரசு

35) காளையை அடக்கும் விளையாட்டிற்கு .......................... என்று பெயராகும்.

1. கொட்டமடக்கல் 2. கொம்புமுறி 3. மஞ்சுவிரட்டு 4. வெறியாட்டு

36) களியாட்ட விழாவைக் காண நண்பர்கள் கூட்டம் மைதானத்திற்குச் ..........................

1. சென்றனர் 2. சென்றது 3. சென்றார்கள் 4. சென்றன

- **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

*கிடைத்த போதுண்டு சோறு*
*கிடைக்காத போது சோங்கி*
*நடுத்தெரு வாழும் ஏழை*
*நம்மவர் போல வானம்*
*கொடுத்த போதுண்டு வெய்யில்*
*கொழுத்தும் போதேற்றுச் சோங்கி*
*அடுத்தவர்க்குதவி நாளும்*
*அழிவேற்றுக் கிடக்கும் காடே*

37) ஆசிரியர் கூறவரும் பிரதான கருத்து

1. காட்டினால் பல நன்மைகள் உண்டு
2. ஏழைகளின் வாழ்க்கை நடுத்தெருவிலே கழியும்
3. ஏழைகளைப் போலவே காடும் சோர்வு அடையும்
4. ஏழைக்கும் காட்டிற்கும் ஒற்றுமை உண்டு

38) பிரதான கருத்தை ஆசிரியர் வலியுறுத்தும் முறை

1. உரையாடல் மூலம்
2. காரண காரியத் தொடர்பு மூலம்
3. நியாயப்படுத்தல் மூலம்
4. ஒப்பீட்டு முறை மூலம்

39) இப்பாடலில் காணப்படும் அணி

1. உவமை
2. உருவகம்
3. சிலேடை
4. எதுகை

40) கீழே சில வாக்கியங்களில் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக் கோப்பான பந்தி ஒன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) இத்தொடர்பினால் வாழும் மொழிகளிலே பிற மொழிக் கலப்பு நிகழ்வது இயல்பு.

ஆ) இதனால் மொழிக் கலப்பு உண்டாகின்றது.

இ) அரசியல், வாணிபம் காரணமாக ஒரு மொழி பேசுவோர் வேற்று மொழியாளரோடு ஊடாடுவர்.

ஈ) எந்தவொரு மொழிக்குரியவரும் வேற்று மொழியாளரோடு தொடர்பு கொள்ளாமல் இருத்தலியலாகாது.

உ) இக்கலப்பை வரையறையின்றி நிகழவிடாது வரம்பு படுத்திக் காப்பதே இலக்கணகாரரின் கடமையாகும்.

1. ஈ, இ, அ, ஆ, உ
2. இ, ஆ, ஈ, அ, உ
3. இ, ஆ, அ, உ, ஈ
4. இ, ஈ, உ, ஆ, அ

(1 × 40 = 40 புள்ளிகள்)

தரம் 11

# பாடசாலை மட்ட மூன்றாம் தவணை மதிப்பீடு 2023(2024)

## தமிழ் மொழியும் இலக்கியமும் - III

புள்ளி

சுட்டெண்

நேரம்: 2 மணித்தியாலம்

கவனிக்க:

- அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

01) சுருக்கமான விடை தருக.

1. "சிந்தூரத்தின் மருப்பு ஒசித்த செங்கண்மாலே"
   அ. இங்கு செங்கண்மால் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
   ஆ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?

2. "யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல, அன்பால் அன்பும் அருளும் அறனும் மூன்றும்"
   அ. இவ்வடிகள் இடம்பெறும் இலக்கியம் எது?
   ஆ. இவ்வடிகளில் கடவுளிடம் வேண்டுபவை எவை?

3. "இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அப்பின்னம் இதே போன்று இலக்கியங்களுடன் அபின்னமாய் நின்று உணர்வார்க்கு இவை புலனாகும்"
   அ. அபின்னம் என்ற வடசொல்லின் பொருள் யாது?
   ஆ. இலட்சியம் என்றால் என்ன?

4. "பறம்பு மலையின் சுனை நீரில் ஒரு மடக்கு குடியுங்கள்"
   அ. இவ்வாறு கூறியவர் யார்?
   ஆ. பறம்பு மலையின் அரசன் யார்?

5. "தொல்காப்பியர் கருப்பொருளில் பயன்பாட்டுத் துறைகள் சிலவற்றைக் கூறுகிறார். வழிபாடும், இசையும், இசைக்கருவிகளும் சில"
   அ. கருப்பொருள் என்றால் என்ன?
   ஆ. கருப்பொருள் பற்றிக் கூறும் இலக்கண நூல் எது?

6. "உழும் உழவர் பலவின் கனியைப் பறித்ததென்று சங்கிட்டெறியக் குரங்கு இளநீர்தனை கொண்டெறியும் தமிழ் நாடா"
   அ. இங்கு எந்த நாட்டின் வளம் எடுத்துக் காட்டப்படுகின்றது?
   ஆ. எச்செயலின் மூலம் விளக்கப்படுகின்றது?

7. "நீவீர் ஐவீரும் ஒருவீர் ஆய் அகல் இடத்தை நெடும் காலம் அளித்தீர்"
   அ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
   ஆ. இங்கு குறிப்பிடப்படும் ஐவரும் யாவர்?

8. “உங்களுக்கு எப்படி வேண்டும்? வலது கை தூண்டிலா? அல்லது இடது கையா?”
   அ. இக்கூற்று யாரால்? யாருக்கு கூறப்பட்டது?
   ஆ. இக்கதையின் ஆசிரியர் யார்?

9. “தமிழ் நாட்டில் சினிமா வளராததற்கு முக்கிய காரணம் அது நாடகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்ததாகும்.”
   அ. நாடகம் என்றால் என்ன?
   ஆ. மேற்தரப்பட்ட கூற்றுக்குச் சார்பான 2 கருத்துக்களைத் தருக.

10. “இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத்தான் அந்தப் பாரிய கூட்டம் நடக்கிறது.”
   அ. இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் யார்?
   ஆ. இருவர் எனக் குறிப்பிடப்படும் இருவரும் யாவர்? (20 புள்ளிகள்)

02) பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைநடைப் பகுதியையும் வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1. சூழ மாய வுலகினிற் காணுறுந்
   தோற்றம் யாவையும் மானத மாகுமால்:
   ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்,
   அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்,
   தாழு முள்ளத்தார், சோர் வினர், ஆடுபோல
   தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்,
   வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்,
   விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

   அ. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணியை இனங்கண்டு விளக்குக.
   ஆ. ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்கள் எவை?

2. அறந்தானே யென்கின்ற வயனின்றா
   டனைநோக்கி, யைய வன்பி
   னிறைந்தாளை யுரையென்ன, நெறிதிறம்பாத்
   தன்மெய்யை நிற்ப தாக்கி,
   இறந்தான் றனிளந்தேவி, யாவர்க்குந்
   தொழுகுலமா மிராமன் பின்பு
   பிறந்தானு முளனென்னப் பிரியாதான்
   றனைப் பயந்த பெரியா ளென்றான்

   அ. இப்பாடலில் சுமித்திரையின் சிறப்புக்களைக் கூறுக.
   ஆ. இலக்குமணனின் சிறப்புக்களைத் தருக.

3. குரவரையும் கிளைஞரையும் குலத்து உரிய
   துணைவரையும் கொன்று போர் - வென்று
   அரவ நெடுங்கடல் ஆடை அவனி எலாம்
   தனி ஆளும் அரசு தன்னில்
   கரவு உறையும் மனத் தாதை முனிக்கு உரைத்த
   மொழிப்படியே கானம் தோறும்
   இரவு பகல் பல மூல சாகம் நுகர்ந்து
   உயிர் வாழ்தல் இனிது நன்றே

   அ. தருமனின் சமாதான மனநிலை எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது.
   ஆ. “கரவு உறையும் மனத் தாதை முனிக்கு உரைத்த மொழிப்படியே” என்ற வரிகளின் மூலம் விளங்குவது யாது?

4. முதல் நாளே நான் ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்தேன். கணிப்பொறி என்பது ஒரு இராட்சச வேலைக்காரன். சொல்லும் வேலைகளையெல்லாம் கச்சிதமாகச் செய்யும். ஆனால் தவறான கட்டளைகளைப் பிறப்பித்து விட்டாலோ தானே எஜமானன் ஆகிவிடும். பிறகு நீங்கள் அதற்கு அடிமைதான். இன்னொன்று, பயந்து பயந்து இதை அணுகினால் அது எட்ட எட்டப் போய்விடும். எனது ஒன்பது வயது மகன் மீன் குஞ்சு நீந்துவது போல உற்சாகமாக அதனோடு ஒட்டிப்பழகிவிட்டான். தன்னுடைய இரகசியக் கதவுகளை அவனுக்குத் தங்கு தடையின்றி திறந்து விடத் தயாராகிவிட்டது.

   அ. இப்பந்தியின் பிரதான பாத்திரம் கண்டு பிடித்த இரண்டு உண்மைகளும் எவை?

   ஆ. இப்பந்தியில் இடம்பெறும் உவமைத் தொடர் யாது? அத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?

5. பிற நாடுகளில் இருந்து வந்த சமயக் குரவர் தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடித்து, இக்கண்ணோட்டத்துடன் தமிழர் மரபின்படியே இலக்கியங்களையும் இலக்கணங்களையும் யாத்தார்கள். வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர், போப்பையர் போன்றவர்கள் இம்மனநிலையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள். தமிழ் பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறி வருகின்றேன். ஏனனில் தமிழில் உள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும், ஆழத்திலும், பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறெந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன். பரிபாடல் முதலாக, இராமலிங்க சுவாமிகளும் விபுலானந்த அடிகளும் ஈறாக பக்திப் பாடல்களைப் பாடிய புலவர்கள் எண்ணிறந்தவர்கள்.

   அ. தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடித்தொழுகிய பிறநாட்டு சமயக் குரவர்கள் யாவர்?

   ஆ. தமிழ் பக்தியின் மொழியென்று கூறப்படுவதற்கான காரணம் என்ன?

(20 புள்ளிகள்)

**03)** தத்தைவிடு தூது என்ற கவிதையில்

1. இப்பகுதியில் தலைவன் தலைவி மீது கொண்ட காதல் எவ்வாறு புலப்படுகின்றது?
2. இப்பகுதியில் கூறப்பட்ட பெண் விடுதலை / பெண்ணியம் சார்ந்த கருத்துக்கள் பற்றி எடுத்துரைக்க.

**அல்லது**

அற்றைத் திங்கள் என்ற நாடகத்தில்

1. போரின் கொடுமை
2. பாரி மகளிரின் துயர் நிலை

   ஆகியன எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

**04)** 'கம்பியூட்டர்' சிறுகதையில்

1. சிறுகதையில் வெளிப்படும் நகைச்சுவை உணர்வுகள்
2. சிறுகதையாசிரியரின் மொழிநடைச் சிறப்புக்கள்

   ஆகியன எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

எது நல்ல சினிமா என்ற பாடப்பகுதியில் இருந்து

1. சினிமா ஒன்றின் காட்சிப் படிமம், ஒலி, படத்தொகுப்பு, குறியீடு பற்றியும்,
2. இன்றைய சினிமாவில் காணப்படும் நாடகத் தன்மைகள் என்பவற்றையும் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

❖ **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒரு வினாவுக்கு விடை எழுதுக.**

**05)** நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்

அ. நாவலரின் தோற்றம்

ஆ. பிறிற்றோவின் நேர்மையற்ற செயல்கள்

என்பன உணர்த்தப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

**06)** "பாரதியார் சுயசரிதை" பகுதியில்

அ. நாம் விரும்பும் எவற்றையும் அடைய இயலாமைக்கான காரணம்

ஆ. உவமையணிப் பயன்பாடு

என்பன பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

**07)** "குற்றாலக் குறவஞ்சி" பகுதியில்

அ. குறவஞ்சி இலக்கிய வடிவம் பற்றியும்

ஆ. குற்றால நாதரின் பெருமைகள் பற்றியும்

எடுத்துக்காட்டுக

(10 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| | **பாடசாலை மட்ட இறுதிக் கணிப்பீடு – 2023(2024)** | |
| தரம் 11 | **தமிழ் மொழியும் இலக்கியமும் - *I,II,III*** <br> **விடைகளும் புள்ளித்திட்டமும்** | |

## பகுதி - *I*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 9) | 4 | 17) | 2 | 25) | 3 | 33) | 1 |
| 2) | 2 | 10) | 1 | 18) | 2 | 26) | 1 | 34) | 2 |
| 3) | 1 | 11) | 4 | 19) | 1 | 27) | 3 | 35) | 3 |
| 4) | 2 | 12) | 2 | 20) | 3 | 28) | 2 | 36) | 2 |
| 5) | 1 | 13) | 1 | 21) | 3 | 29) | 2 | 37) | 3 |
| 6) | 3 | 14) | 1 | 22) | 4 | 30) | 4 | 38) | 3 |
| 7) | 3 | 15) | 1 | 23) | 3 | 31) | 2 | 39) | 1 |
| 8) | 3 | 16) | 4 | 24) | 3 | 32) | 3 | 40) | 3 |

(40 புள்ளிகள்)

## பகுதி - *II*

1)

1. கூட்டில் பசும் கிளி போல கோதையரை எப்பொழுதும் இழித்து

2. எழுவாய் - அவன் (தோன்றா எழுவாய்)
   பயனிலை - நின்றான்

3. என் மிதமிஞ்சிய "பயந்தாங்கொள்ளி" பட்டத்தை நான் எரித்தாயிற்று

4. பெயர் - துணி வாங்கினேன்
   வினை - துணிந்தேன்

5. கூரும்

6. குமாரால் பாட்டுப் பாடப்பட்டது

7. தலைமைத் தொடர் - அதிபர் கூறினார்
   சார்புத் தொடர் - நாளை சுதந்திர தின விழா நடைபெறும்

8. "விட்டுவிடாதே! விட்டுவிடாதே! பிடி"

9. வன்தொடர் - கொக்கு
   மென்தொடர் - பஞ்சு, பந்து

10. போ, வா, செய்யுங்கள், குடியுங்கள்

2) **கட்டுரை**

| | |
|---|---|
| பொருளமையும் அளவும் | (12 புள்ளிகள்) |
| கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | (6 புள்ளிகள்) |
| எழுத்து நுட்பங்கள் | (5 புள்ளிகள்) |
| தலையங்கம் | (2 புள்ளிகள்) |
| **மொத்தம்** | **(25 புள்ளிகள்)** |

3) **சுருக்கம்**

| | |
|---|---|
| விடய உள்ளடக்கம் | (6 புள்ளிகள்) |
| சொல்லளவு | (2 புள்ளிகள்) |
| மொழிநடை | (2 புள்ளிகள்) |
| **மொத்தம்** | **(10 புள்ளிகள்)** |

40 - 45 சொற்களுக்குள் உள்ளடக்கல்
35 - 50 வரை ஏற்கலாம்
35 ஐ விட குறைவாகவோ 50 சொற்களுக்கு கூடுதலாகவோ இருப்பின் புள்ளி குறைக்கவும், பத்திகளாக எழுதியிருப்பின் 2 புள்ளிகள் குறைக்கவும்.

4)

1. முன்னேறுவர், புகழ் பெறுவர், மதிப்புறுவர், மகிழ்ச்சியுறுவர்.
2. இடைவிடாது முயன்றால் வெற்றி கிடைக்கும்.
3. கட்டை வண்டியில் செய்து வந்த பயணம் காற்று வேகத்தில் நாற்றிசையில் செல்கின்றது. பாலைவனம் சோலைவனமாகிறது.
   இருந்த இடத்திலிருந்தே தொலைவில் உள்ள பேச்சைக் கேட்க முடிகிறது.
4. நுட்பமதியோடு கூடிய திட்ப முயற்சியால் தேவரினும், யாவரினும் மேலான்மையால்.
5. தவத்தால்

(10 புள்ளிகள்)

5) **கடிதம்**

| | |
|---|---|
| அமைப்பு | - 5 புள்ளிகள் (முகவரி, உள் முகவரி, விளிப்பு, தலைப்பு, பதவி, ஒப்பம்) |
| உள்ளடக்கம் | - 7 புள்ளிகள் |
| மொழிநடை | - 3 புள்ளிகள் |
| **மொத்தம்** | **- (15 புள்ளிகள்)** |

**அறிக்கை**

| | |
|---|---|
| அமைப்பு | - 5 புள்ளிகள் (தலைப்பு, விளிப்பு, திகதி, வெளியீடு) |
| உள்ளடக்கம் | - 7 புள்ளிகள் |
| மொழிநடை | - 3 புள்ளிகள் |
| **மொத்தம்** | **- (15 புள்ளிகள்)** |

## பகுதி - *III*

1)

1.
   அ) திருமால்
   ஆ) தருமனால் - திருமாலுக்கு

2.
   அ) பரிபாடல்
   ஆ) அன்பு, அருள், அறம்

3.

அ) ஒருமைப்பாடு
ஆ) குறிக்கோள்

4.

அ) கபிலர்
ஆ) பாரி

5.

அ) குறித்த ஒரு நிலத்தின் பண்பாட்டுக் கூறுகள் (தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறை, யாழ், தொழில் முதலியன)
ஆ) தொல்காப்பியம்

6.

அ) சோழநாடு
ஆ) உழவர்கள், சங்குகளால் குரங்குகளுக்கு எறிய குரங்குகள் இளநீர் கொண்டு எறிவதன் மூலம்.

7.

அ) கோசலையால்
ஆ) இராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கன், குகன்

8.

அ) பணிப்பெண்ணால் - கதாசிரியருக்கு
ஆ) அ. முத்துலிங்கம்

9.

அ) ஒரு நிகழ்ச்சியை அவையோர் முன் நிகழ்த்திக் காட்டுவது
ஆ) நாடகத்திற்கு அடிமைப்பட்டிருத்தல், பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

10.

அ) வை. விசுவநாதம்பிள்ளை
ஆ) பிறிற்றோ, பொன் இராமநாதன்

(10 × 2 = 20 புள்ளிகள்)

2)

1.

அ) உவமை அணி (விளக்கப்படுதல் வேண்டும்)
ஆ) தாழ்வு மனப்பான்மை, சோம்பேறி, ஆடு போல் பல பொருள்களில் ஆசை கொள்ளுதல்

2.

அ) அறந்தானே என்று சொல்லத்தக்கவள்
அன்பினால் நிறைந்தவள்
ஆ) எல்லோருக்கும் தெய்வமான இராமனுக்கு தம்பியும் உண்டு என்று உலகத்தார் சொல்லும் அளவிற்கு அவனது இன்ப காலத்திலும் துன்ப காலத்திலும் பிரியாதவன்.

3.

அ) சான்றோர்களையும் உறவினர்களையும் ஒரே குலத்தில் தோன்றிய தம்பிமார்களையும் இழந்து இந்த நாட்டை ஆட்சி செய்வதை விட காட்டுக்குச் சென்று பழம், கழங்கு, இலை, உண்டு வாழ்வது இனிது.
ஆ) வஞ்சகம் நிறைந்த மனதினையுடைய பெரிய தந்தை சொன்ன வாக்கின்படி

4.

அ) கனிப்பொறி என்பது ஒரு இராட்சச வேலைக்காரன்
பயந்து பயந்து அணுகினால் அது எட்ட எட்ட போய் விடும்

ஆ) "மீன் குஞ்சு நீந்துவது போல"

5.

அ) வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர், போப்பையர்

ஆ) தமிழில் உள்ள பக்தி இலக்கியங்களைப் போல் அழகிலும் ஆழத்திலும் பரப்பிலும் இத்துணை இலக்கியம் இல்லை ஆதலால்

(5 × 4 = 20 புள்ளிகள்)

3) **தத்தைவிடு தூது**

அ) தலைவியின் மீதான காதல் அதிகரிப்பினால் கிளியைத் தூதனுப்பியது

- மங்கையான அவளிற்கு தகுந்த மணாளன் தானே எனக் கேட்பது.
- தன் காதலியை நினைத்து மெலிகிறேன் மேலும் மெலிந்தால் உடலில் உயிர் தங்காது எனக் கூறுதல்.
- அவளது முகம் பாராது, பேச்சைக்கேளாது உயிர் வாழ மாட்டேன் எனக் கூறுவது.

போன்ற விடயங்கள் விளக்கப்படல் வேண்டும்.

ஆ) முட்டாள்கள், அறிவில்லாதவர்கள், எளியவர்கள் போன்றவர்களுக்கு பெண்களை திருமணம் செய்து கொடுக்கக்கூடாது.

- பெண்ணருமை அறியாத பேதையர்க்கு பெண்ணை மணம் செய்து கொடுக்கக்கூடாது.
- அறிவில்லாதவர்களே பெண்கள் கல்வி கற்பதை விரும்பமாட்டார்கள் அவர்களின் மகிழ்ச்சியான வாழ்விற்கு இடையூறு செய்வார்கள்.
- சிறுவர்களின் பொம்மைக் கல்யாணம் போல் பெண்களின் திருமணத்தையும் நடத்தி முடிப்பர்.

போன்ற கருத்துக்கள் விளக்கப்படல் வேண்டும்.

**அற்றைத் திங்கள்**

அ) அரளிப்பூ தண்டெடுக்கப்போன அத்தை திரும்பவில்லியே, மல்லிகைப்பூ செண்டு கட்டப் போன மாமன் மீளவியே, தாலாட்டில் அசைந்திருந்த தொட்டில் வரை இரத்த வெள்ளம், பால் வார்த்த நிலா முகத்தில் பற்றி விட்ட தீப்பந்தம், ஏலம் பூ போன்ற வாய் பொசுங்குதல் அதன் மூலம் எரிகிறது. தீ பந்தம், காலப் புனல் கணக்கும் கண்ணீரையும் சுமந்து தாலாட்டுப் பாடலின் பின்னைய பகுதியில் போரினால் ஏற்பட்ட பேரழிவைக் காட்டுகின்றது.

ஆ) தந்தையில்லை, தந்தையின் தேரில்லை

பறம்பு, மலையை, பறம்பு மலையின் பால்வார்க்கும் நிலவை, பறம்பு மலையின் அன்பை எப்படி விட்டுச் செல்வது, குறவர்கள், எயினர்கள், கானவர்கள் தந்தையின் பிரிவில் விதிர்த்துப் போய் விட்டார்கள். நினைவில்லாத தாயின் முகத்தினை நிலவினைக் காட்டி மகிழ்ந்த அன்புத் தந்தையில்லை.

(15 புள்ளிகள்)

4) கம்பியூட்டர்

அ) அவனின் முகலாவண்யம் கதைப்பதற்கு அசையூட்டுவதாக இல்லை.

- அவன் தலையில் இருக்க வேண்டிய முடியெல்லாம் மூக்கு வழியாகவும் காது வழியாகவும் வந்து கொண்டிருந்தது.
- கட்டுச் சோறு கட்டிக் கொண்டு வந்திருக்க வேண்டும்.
- டிக்கட் வேண்டாம் கையை விடு.
- அடுத்த முறை வரும் போது இவருடைய கேள்விக்கெல்லாம் பதிலை ஒரு புத்தகமாக அடித்துக் கொண்டு வருவது.

- சிவக்கொழுந்து 1008 வேட்டி வாங்க வண்டிலக் கட்டி பெரிய கடைக்குப் போனதைப் போல.
- மனைவி மேகலா என்ற பெயரை *Mega* என்று எழுதுகிறார்.

ஆ) எளிமையான சொல்லாட்சி
- சிறுசிறு வாக்கிய அமைப்பு
- வாசகர்களை ஈர்க்கும் சுவாரஸ்யமான நடை
- தேவைக்கேற்ப பேச்சுவழக்குக் கையாளப்படுதல்
- கலைச் சொற்களின் பயன்பாடு
- வடமொழிச் சொற்களின் பயன்பாடு
- நகைச்சுவைப் பாங்கிலான மொழிச் சேர்க்கை
- அணிகளின் பயன்பாடு
- சந்தர்ப்பத்திற்கு ஏற்ப புராணக் கதைகளைப் பயன்படுத்தி இருத்தல்.

**எது நல்ல சினிமா**
**அ) காட்சிப் படிமம்**
- காட்சிப் படிமம் மட்டுமே மனித மனத்தின் வெவ்வேறு உணர்வு நிலைகளை வெளிப்படுத்தும், காட்சிப் படிமத்தினால் வெளிக்கொணரும் உணர்வை வார்த்தைகளால் கூற முடியாது.

ஒலி
- காட்சிப் படிமத்திற்கு ஒலி துணையாக உள்ளது. காட்சிப் படிமத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஒலிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது சினிமா சீரழிகிறது.

படத்தொகுப்பு
- தனித்தனியாக ஒலிப்பதிவு செய்யப்பட்ட காட்சிப் படிமங்கள் ஒளிப்பதிவுகள் சிறந்த முறையில் கோர்வையாக்கப்படுவதாகும்.

ஆ) கதாபாத்திரங்கள் சதுரமான திரையின் விளிம்பில் இருந்து வருவார்கள்.
- மேடைக்குள் நுழைவதைப் போல் வசனத்தைப் பேசிவிட்டு பக்கவாட்டில் சென்று மறைவார்கள்.
- குரலை ஏற்றி இறக்கிக் கத்திப் பேசுவார்கள்.
- பாத்திரங்கள் காமெராவைப் பார்த்துப் பேசுவார்கள்.
- படம் முழுவதும் பின்னணி இசை ஒலித்துக் கொண்டிருக்கும்.

(15 புள்ளிகள்)

5) **நாவலர் எழுந்தார்**
அ) கம்பீரமான தோற்றம்
- வீறு கொண்ட பார்வை
- எண்ணங்களின் வேகம்

ஆ) நல்லூர் கந்தசுவாமிக் கோயிலாருக்கும் பிராமணருக்கும் நடந்த பாரிய வழக்கில் கோயிலாருக்கு ஏற்பாட்டாளராக இருந்தவர் பிறிற்றோ. பிராமணருக்கு ஆதவராக நாவலர் இருந்தார். நாவலர் தமக்குச் சார்பாக இருந்தால் தாம் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்தி வைப்பதாக தந்தி தபால்களில் குறிப்பிட்டிருந்தமை சபையில் அம்பலமாகியதால் அவர் தக்கவர் அல்ல என்பதோடு அவரது நேர்மையற்ற செயல் எடுத்துக் காட்டப்படுகின்றது.

(10 புள்ளிகள்)

6) **பாரதியார் சுயசரிதை**

அ) தாழும் உள்ளம்

- சோம்பேறிகள்
- ஆடுபோல் பல பொருள் நாடுவோர்
- வீழ்ச்சி தரும் ஒரு துன்பத்திற்கு அஞ்சுதல்

ஆ) மணி நித்திலப் புன்னகை சுடர் வீசிட

- சீர் எடுத்த புலையியற் சாரர்கள்
- தேருருளைப்படு மேழைதான்
- ஆடுபோல் தாவித்தாவி
- கண்ணில்லாதவர் போல்

7) **குற்றாலக் குறவஞ்சி**

அ) சிற்றிலக்கிய வடிவங்களில் ஒன்றாகும்.

ஆ) கூனவிளம் பிறை முடிந்த வேணியலங்காரர்

- வழங்க கொடை மகராசர் குறும்பலவீசர்
- நாதமுன்றுருவான குற்றால நாதர்
- சந்திர சூடர்

(10 புள்ளிகள்)

☞ பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

6) பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு
(1) கடிதம் - முகவரி
(2) சிறுகதை - கரு
(3) கட்டுரை - பந்தி
(4) அழைப்பிதழ் - முகவுரை

7) ராதினி தனது கையடக்கத் தொலைபேசிக்கு Password கொடுத்தாள். Password என்ற சொல்லுக்கு நிகரான தமிழ்ச்சொல்
(1) கடவுச்சீட்டு (2) இரகசியம் (3) கடவுச்சொல் (4) அடையாளம்

8) பிச்சை, சந்தேகம், இரத்தல் என்ற பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
(1) அச்சம் (2) கலக்கம் (3) இரக்கம் (4) ஐயம்

9) தோடம்பழத்தின் உள்ளீடு சுளை என்பது போல ஆமணக்கின் உள்ளீடு
(1) முத்து (2) மணி (3) பருப்பு (4) சோறு

10) குமரன், நண்பனை நட்டாற்றில் விட்டான். நட்டாற்றில் விடல் என்ற மரபுத்தொடரின் பொருள்
(1) ஆபத்தில் கைவிடல்
(2) இரங்குதல்
(3) நடு ஆற்றில் விடல்
(4) கைகொடுத்தல்

11) பகைமேற்சென்ற அரசன் தன் படையுடன் தங்கியிருக்கும் இடம்
(1) பாசறை (2) போர்க்களம் (3) முகாம் (4) சேனை

12) நீர் மேல் எழுத்துப்போல என்ற உவமைத் தொடருக்கு எதிர்ப்பொருள் தரும் வகையில் அமைந்த உவமைத்தொடர்
(1) விழலுக்கு இறைத்த நீர் போல
(2) சிலையில் எழுத்துப் போல
(3) பாலும் தேனும் போல
(4) சித்திரப் பதுமை போல

13) அவனை அணுஅணுவாகக் கொன்றனர். **அணுஅணு** என்பது
(1) இரட்டைக்கிளவி
(2) அடுக்குத்தொடர்
(3) அடுக்கிடுக்குத்தொடர்
(4) இணைமொழி

14) கடும் வெய்யிற் காலத்தில் வெளிகளில் நீர் ஓடுவது போல தெரியும் ஒருவகைத் தோற்றம்
(1) ஊற்றுநீர் (2) கற்பனை (3) கானல்நீர் (4) கோடை

15) போத்து, அலவன் ஆகிய ஆண்பால் மரபுப் பெயர்களைக் கொண்ட பிராணிகள்
(1) குதிரை, நண்டு
(2) மயில், நண்டு
(3) மயில், கிளி
(4) நண்டு, குதிரை

16) வைரவிழாவைக் குறிக்கும் மற்றொரு பெயர்
(1) அமுதவிழா (2) மணி விழா (3) பவள விழா (4) வெள்ளி விழா

17) வறுமை, செல்வம் இரண்டையும் ஒன்றாகக் கருதும் பற்றற்ற நிலையை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்
(1) எழுமையும் தொடரும் உழுவலன்பு
(2) தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன்
(3) குற்றங்களைந்து குணங்கொள்ளல்
(4) ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்

18) உலாந்தா என்பது எம்மொழிச் சொல்
(1) போர்த்துக்கேயம் (2) ஒல்லாந்து (3) பாரசீகம் (4) உருது

19) "அடாது செய்பவன் படாது படுவான்" இதற்கு இணையான பழமொழி
(1) இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை
(2) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
(3) கனிந்த பழம் தானே விழும்
(4) வினை விதைத்தவன் வினை அறுப்பான்

20) கோவில்களில் புராணக் கதைகளைச் சுவைபட பிரசங்கம் செய்பவன்
(1) பௌராணிகன் (2) பூசாரி (3) வேதாந்தி (4) பிரசங்கி

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்
Provincial Department of Education, Eastern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர) முன்னோடி கணிப்பீடு, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Pilot Assessment, 2023(2024)

தமிழ் மொழியும் இலக்கியமும் I, II
Tamil language and literature I, II

22 T I,II

மூன்று மணித்தியாலம்
Three hours

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்குக.**

I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை வட்டத்தினுள்ளே புள்ளடியை இடுக.
IV. அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

சுட்டெண் : ...............................

☞ தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) "எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தார்....." இங்கு **கனல்** என்பது

(1) நீர் (2) காற்று (3) தீ (4) ஆகாயம்

2) "குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கு....." இங்கு **குடர்** என்பது

(1) குழல் (2) வயிறு (3) உயிர் (4) சுமை

3) "பைந்தார் பசுங்குழலாள் பாவமறி யாளகிளியே....." இங்கு **பாவம்** என்பதன் எதிர்க்கருத்து

(1) புண்ணியம் (2) பழி (3) சாபம் (4) கோபம்

4) "தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து......" இங்கு **தண்** என்பதன் எதிர்க்கருத்து.

(1) சூடு (2) குளிர்ச்சி (3) தண்மை (4) கடுமை

5) "சொல்லும் வேலைகளை எல்லாம் கச்சிதமாகச் செய்யும்" இங்கு **கச்சிதம்** என்பது

(1) கீழ்ப்படிவு (2) உடனடி (3) நேர்த்தி (4) கிரகித்தல்

☞ பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க.

21) ராதிகா பொருளியல் பாடத்தில் விருப்பமுடையவள். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள ஆக்கப்பெயர்
(1) ராதிகா (2) பொருளியல் (3) பாடம் (4) விருப்பம்

22) நான் திருகோணமலைக்குப் போயிருந்தேன். உனது வீட்டிற்கு வர முடியவில்லை. மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்
(1) எனினும் (2) ஏனெனில் (3) ஆகையால் (4) ஆனாலும்

23) ககரம் எந்தச் சொல்லில் 'g' என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கிறது
(1) மேகம் (2) கதவு (3) தங்கம் (4) கடை

24) அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி
(1) சட்டி, சாடி, சீயம், சிட்டு
(2) தாகம், தீமை, தெய்வம், துன்பம்
(3) கீரை, கிளி, கூடை, கொடை
(4) நாகம், நீட்சி, நெய்தல், நைந்தான்

25) பொற்றொடி நடனமாடினாள். இதில் வந்த பொற்றொடி என்பது
(1) பண்புத்தொகை
(2) வினைத்தொகை
(3) வேற்றுமைத்தொகை
(4) அன்மொழித்தொகை

26) முள் + தாள் என்பதைப் புணர்த்தி எழுதினால்
(1) முள்தாள் (2) முள்த்தாள் (3) முட்டாள் (4) முட்றாள்

27) பன்மை விகுதி ஏற்காத சொல்
(1) காய்
(2) புல்
(3) மழை
(4) நிலம்

28) பின்வருவனவற்றுள் வன்றொடர் குற்றியலுகரம்
(1) பஞ்சு (2) பாக்கு (3) பங்கு (4) கடுகு

☞ பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

29) (1) தன்வினை : வந்தான், படித்தான், கண்டான்
(2) பிறவினை : கட்டுவித்தான், படிப்பித்தான், உருண்டான்
(3) செய்வினை : உழுதான், குடித்தான், சாப்பிட்டான்
(4) செயப்பாட்டுவினை : உழப்பட்டது, குடிக்கப்பட்டது, நடாத்தப்பட்டது

30) (1) காரணப்பெயர் : பறவை, மண்வெட்டி, குணவதி
(2) இடுகுறிப்பெயர் : மரம், கடல், வானம்
(3) காரண இடுகுறிப்பெயர் : முள்ளி, நாற்காலி, அந்தணன்
(4) ஆக்கப்பெயர் : கொலையாளி, பொருளியல், மின்சாரசபை

☞ புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31) நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கலால் வர்த்தக நிறுவனங்களுக்கு .......... விதிக்கப்பட்டுள்ளது.
(1) மானியம் (2) சன்மானம் (3) வரி (4) கட்டுப்பணம்

32) அரசு சமீபகாலமாகவே அத்தியாவசியப் பொருட்களின் குறைந்தபட்ச விலைகளை .......... இல் வெளியிட்டது.
(1) விஞ்ஞானம்
(2) சுற்றுநிருபம்
(3) வர்த்தமானி
(4) அறிக்கை

33) அயல் நாடுகளிடையே வணிகப் பரிமாற்றத்தின் போது ஏற்படும் நாணய மதிப்பீடே .......................... என அழைக்கப்படுகிறது.
(1) டொலர் பெறுமதி
(2) அந்நியச்செலாவணி
(3) கையிருப்பு
(4) ரூபாய் பெறுமதி

34) தேசிய கல்வி ஆணைக்குழு கல்விச் சீர்திருத்தத்திற்கான ............... முன்வைத்தது.
(1) ஆலோசனைகளை
(2) சிபார்சுகளை
(3) நிபந்தனைகளை
(4) பிரேரணைகளை

☞ வாக்கியங்களின் முற்பகுதிக்குப் **பொருத்தமான** முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

35) தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் சில நாடகங்களால் பிற்காலத்தில் மக்களின் கலாசாரம் ...............
(1) பாதிப்படைகின்றன
(2) பாதிப்படைந்தன
(3) பாதிப்படையும்
(4) பாதிப்படைந்தது

36) களிறோ காவலனோ .................................
(1) அங்கே தெரிகின்ற உரு
(2) அங்கே தெரிபவன்
(3) அங்கே தெரிவது
(4) அங்கே தெரிபவர்

☞ **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

கிளர்ச்சி செய்யும் தொண்டர்களின் உணர்ச்சி வெள்ளம்
கெடுவழியில் செல்லாமல் தடுத்து நன்கு
வளர்ச்சி பெறச் செய்கின்ற தலைவன் போலே
வருவெள்ளப் பெருக்கனைத்தும் பாழ்படாமல்
அளப்பரிய நன்மை செய்யத் தடுத்து நிற்கும்
அணைக்கட்டின் அழகைப்பார்

37) இப்பாடலினூடாக கவிஞர் சொல்ல வந்த கருத்து யாது?
(1) தொண்டர்களின் கிளர்ச்சி
(2) வெள்ளப்பெருக்கு
(3) அணைக்கட்டின் சிறப்பு
(4) தலைவனின் பணி

38) உணர்ச்சி வெள்ளம் என்பது
(1) உருவக அணி
(2) உவமை அணி
(3) சிலேடை அணி
(4) தற்குறிப்பேற்ற அணி

39) இப்பாடலின் கருத்துக்குப் பொருந்தாத கூற்றைத் தெரிவு செய்க.
(1) தொண்டர்கள் கிளர்ச்சி செய்வார்கள்
(2) தலைவன் தொண்டர்களின் வளர்ச்சிக்கு வழிவகுப்பான்
(3) வெள்ளப்பெருக்கை அணைக்கட்டுக்கள் தடுக்கின்றன.
(4) தலைவன் தொண்டர்கள் கிளர்ச்சி செய்ய வழிவகுப்பான்

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) அவற்றுள் கம்பராமாயணம் ஈடிணையற்றது
(ஆ) அது தொன்மையான நாகரிகம் படைத்த நாடு
(இ) அதனால் இராமாயணத்தைப் பாடிய கம்பர் கல்வியில் பெரியவராகப் போற்றப்படுகிறார்
(ஈ) அங்கே பழங்காலந்தொட்டு பல நூல்கள் தோன்றி வருகின்றன
(உ) தமிழ்நாடு பாரத கண்டத்தின் தென் பகுதியில் உள்ளது

(1) ஆ,உ,இ,ஆ,ஈ,அ
(2) உ,அ,இ,ஆ,ஈ
(3) உ,ஆ,ஈ,அ,இ
(4) உ,அ,இ,ஈ,ஆ

**(1 X 40 = 40 புள்ளிகள்)**

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved]

**மாகாணக் கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்**
**Provincial Department of Education, Eastern Province**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர) முன்னோடி கணிப்பீடு, 2023(2024)
**General Certificate of Education (Ord. Level) Pilot Assessment, 2023(2024)**

தமிழ் மொழியும் இலக்கியமும் III
**Tamil language and literature III**

**22 T III**

*இரண்டு மணித்தியாலம்*
***Two hours***

**தமிழ் மொழியும் இலக்கியமும் III**

**அறிவுறுத்தல்கள் :**
- அறிவுறுத்தல்களுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக
- 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக
- இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**01. சுருக்கமான விடை தருக.**

I. "பொய்படும் ஒன்றோ புனை பூணும் கையறியாப்
பேதை வினைமேல் கொளின்"

(அ) அறிவிலியின் செயல் எவ்வாறு காணப்படுகிறது?

(ஆ) "புனை பூணும்" என்பதனால் கருதப்படுவது என்ன?

II. "உயிர்ப்பாரம் குறைந்து தேய
வுடர் எலாம் முயிரிலா வெனத் தோன்றும்"

(அ) உயிர்ப்பாரம் யாருக்குக் குறைந்து போனது?

(ஆ) இப்பாடல் வரிகள் ஊடாக புலப்படுத்தப்படும் உணர்வு யாது?

III. "ஓதிப் படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்
ஏழைக்கு செய் தீங்கை - அல்லா எள்ளளவும் ஏற்க மாட்டான்"

(அ) இறைவன் எதனை ஏற்க மாட்டான்?

(ஆ) ஊர் புகழ வாழ்வதற்குக் காரணமான விடயங்கள் யாவை?

IV. "நடுக்குற்றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமு தாளரே மாகிய வெமக்கே"

(அ) மூதாளரின் இயல்பைக் குறிப்பிடுக.

(ஆ) "மூதாளர்" என்பதன் பொருள் யாது?

V. "கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்
மதியிழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்"
(அ) இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் யாது?
(ஆ) கட்டுரை என்பதனால் விளங்கிக் கொள்வது யாது?

VI. அந்த வலியை மாற்றாமல் தமது பிராரத்தம் என்று கருதி அதை அனுபவித்துக் கொண்டு வந்தார்.
(அ) "பிராரத்தம்" என்பதன் பொருள் யாது?
(ஆ) வலியை அனுபவித்துக் கொண்டவர் யார்?

VII. "கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணி லாதவர் போலத் திகைப்பர் காண்"
(அ) கண்ணிலாதவர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) "கதிகள்" எனும் சொல் உணர்த்துவது யாது?

VIII. "காற்றெல்லாம் தேனிழைக்க
மலைமடியில் கண் வளர்த்தோம்"
(அ) இங்கு மலை எனக் குறிப்பிடப்படுவது எது?
(ஆ) "கண் வளர்த்தோம்" என்ற தொடரின் மூலம் வெளிப்படுத்தப்படுவது யாது?

IX. "கனநாளாக ஒரு சிறுகதை என் மனதிலே ஊறப்போட்டுக் கிடந்தது"
(அ) கனநாளாக ஊறப்போட்டுக் கிடந்த சிறுகதையின் பெயர் என்ன?
(ஆ) "ஊறப் போடல்" என்பதன் பொருள் யாது?

X. "தம்மனைக்கோர் பசுவேண்டிற் றாம்பலகாற் பார்த்திருந்தும்
பின்னுந் துணிவிலராய்ப் பேதுறுதல் மாந்தர் குணம்"
(அ) இங்கு மனிதரின் குணம் யாது?
(ஆ) "பேதுறுதல்" என்பதனால் கருதப்படுவது யாது?

**(10X2=20 புள்ளிகள்)**

**02. பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைநடைப் பகுதியையும் வாசித்து அவற்றின் கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

I. "உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை"
(அ) மனத்திருப்தி எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?
(ஆ) அறுசுவைகளும் எவை?

03. கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்,

(அ) பாஞ்சாலியின் பாத்திரச் சித்திரிப்பு

(ஆ)அணிகளின் பொருத்தப்பாடு

ஆகியவற்றை விளக்குக.

**அல்லது**

**'எது நல்ல சினிமா' என்ற கட்டுரையில்**

(அ) நாடகத்திற்கும் சினிமாவிற்குமான வேறுபாடு

(ஆ) ஆசிரியரின் மொழிநடை

ஆகியவற்றை விளக்குக. **(15 புள்ளிகள்)**

04.

**(அ) தத்தைவிடு தூது பிரபந்தத்தில்**

(அ) பெண் விடுதலை

(ஆ) தலைவன், தலைவியை அடையத் துடிக்கும் விதம்

ஆகியன புலப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

**பேதைமை எனும் அதிகாரத்தில்,**

(அ) பேதைமை என்பதன் விளக்கம்

(ஆ) பேதையரின் செயலும் அதன் விளைவும்

வெளிப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.

**(15 புள்ளிகள்)**

**5,6,7 ஆகிய வினாக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து விடையளிக்க**

**05. குழந்தை என எனது மனம் குதூகலிக்கும் கவிதையில்,**

அ) மருதநிலத்து இயற்கை அழகு

ஆ) அணிப்பயன்பாடு

பற்றிய சித்திரிப்பை எடுத்துக்காட்டுக. **(10 புள்ளிகள்)**

**06. நாட்டார் பாடலில்,**

அ) அரிவாள் செய்யும் முறை

(ஆ) இளந்தாரிமார் அரிவி வெட்டும் முறை

ஆகியவற்றை விளக்குக. **(10 புள்ளிகள்)**

**07. பாரதியார் சுயசரிதையில்,**

(அ) சிறுமியின் அழகுச்சிறப்பு

(ஆ) சிறுமிக்காக பாரதியின் காத்திருப்பு

என்பன எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன? **(10 புள்ளிகள்)**

II. "காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார் ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலுமாங்கிழுப் புற்றெனக்
கோத்த, சிந்தனையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பலகழித் திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்"

(அ) பாரதியின் உள்ளம் எவ்வாறு இழுபட்டுச் சென்றது?

(ஆ) பாரதியார், எப்போது புதுப்பிறவி எடுப்பதாகக் குறிப்பிடுகிறார்?

III. "ஊனமே யான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்துமொண் பூணாம்
மானமே புரப்பத் தவனிமே லெவர்க்கும்
வரிசையுந் தேற்றமும் மரபும்"

(அ) அருச்சுனனின் இலட்சியம் யாது?

(ஆ) இப்பாடலில் இடம்பெறும் பொருளணியைக் குறிப்பிட்டு விளக்குக.

IV. சினிமா மொழியைப் பல முறைகளில் வளமடையச் செய்யலாம். குறியீடுகள் (Symbol) மூலம் மையக்கருத்தை வலியுறுத்துவது ஒருமுறை. மகேந்திரனின் உதிரிப்பூக்களில் சூல்கொண்ட கருமேகம் அன்பிற்கு ஏங்கும் ஒரு பெண்ணின் நம்பிக்கையின் குறியீடாகக் காட்டப்படுகின்றது. பெர்க்மன் 'Wild Strawberries' (1957) என்ற படத்தில் அன்பு சிறிதளவும் இல்லாத தம்பதியரைச் சித்திரிக்கின்றார். அவர்கள் செல்லும் கார் வழியில் பழுதடைந்து விடுகின்றது. இருவரும் அதைத் தள்ள முயற்சிக்கிறார்கள். இங்கே அந்த கார், அவர்களது மண வாழ்க்கையின் குறியீடாக அமைகிறது.

(அ) சினிமா மொழியை எவ்வாறு வளமடையச் செய்யலாம்?

(ஆ) "சூல்கொண்ட கருமேகம்" எனும் தொடர் மூலம் ஆசிரியர் கூறவிழைவது யாது?

V. சமணம், புத்தம் போன்ற சமயங்களும் தமிழ்நாட்டில் வரவேற்கப்பட்டதால் இம் மனப்பான்மை விரிவாகியது. பார்ப்பனர், மொழிபெயர்த்தேயத்தார், யவனர், புலம்பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள். இம்மனப்பான்மை ஒருசில காலங்களில் சமயக் காழ்ப்பால் மாசு அடைந்ததாயினும், அது எக்காலத்திலும் தமிழ் மக்களிடம் வளர்ந்தே வந்துள்ளது. பிற மக்களின் நலத்தைக் கருதும் பண்பு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்னும் தன்மை இச்சிறப்பை மேலும் வளர்த்தது. இம்மனப்பான்மை வட ஆரியர், கிரேக்கர் போன்றோருடைய பண்டைக் கொள்கைகளுடன் முரண்பட்டேயிருந்தது. பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும், பிற மக்களை நாகரிகம் அற்றவர்கள் என்றும் கூறிவந்தனர். வட ஆரியர் இமய மலைக்கும் விந்தியமலைக்கும் இடையேயுள்ள நிலம்தான் புண்ணிய பூமி என்று கருதினர்.

(அ) தமிழ் மக்களிடையே காணப்பட்ட உலக மனப்பான்மை பண்புகளைக் குறிப்பிடுக.

(ஆ) தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

**(05X4=20 புள்ளிகள்)**